**<u>செய்தி வெளியீடு எண்.632</u>** **<u>நாள்.4.10.2007</u>**

தமிழக அரசு மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் பி.எஸ்.எம்.எஸ். / பி.ஏ.எம்.எஸ். / பி.யூ.எம்.எஸ். பி.ஹெச்.எம்.எஸ்./ பி.என்.ஒய்.எஸ். ஆகிய மருத்துவ பட்டப் படிப்புகளுக்கு 2007–2008க்கான பகிரங்க கலந்தாய்வு மதிப்பெண் மற்றும் இன சுழற்சி முறையில் நடைபெற உள்ளது. இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களில் ஒரே முறையில் தேர்வு பெற்ற விண்ணப்பதாரர்கள் ( குறைந்த பட்ச கூட்டு தகுதி மதிப்பெண் – பொதுப்பிரிவினர் 50 % பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 45 % மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 40% ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 35 %) பகிரங்க கலந்தாய்வில் கலந்து கொள்ள தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் 31–12–2007 க்குள் 17 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்.

பகிரங்க கலந்தாய்வு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் அலுவலகம், அரும்பாக்கம், சென்னை –106 ல் 09–10–2007 அன்று காலை 9.00 மணியளவில் நடைபெற உள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய அனைத்து அசல் சான்றிதழ்களுடனோ அல்லது படிக்கும் கல்லூரி சான்றிதழ் மற்றும் பாஸ்போர்ட் புகைப்படத்துடன் நேரடியாக வந்து, விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, மற்ற சான்றிதழ்களையும், இரண்டு ரூ.500/–க்கான கேட்பு வரைவோலை களையும் ( ஒன்று விண்ணப்ப படிவத்திற்கும் மற்றொன்று கலந்தாய்வு கட்டணத்திற்கும் உரியது), மேற்படி அலுவலகத்தில் அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

பயிற்சி கட்டணத்திற்குரிய ரூ.5,000/– க்கான மற்றொரு கேட்பு வரையோலை ஒன்றினையும் ( ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு விண்ணப்ப படிவ கட்டணம் ரூ.500/– க்கு மட்டுமே விலக்கு அளிக்கப்பட்டுள்ளது). கேட்புக் காசோலை ( டிமாண்ட் டிராப்ட்) 5.10.2007 அன்றோ அதற்கு பின்னரோ பெறப்பட்டதாகவும், சென்னையில் மாற்றக் கூடியதாகவும், செயலர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை 106 என்ற பெயரில் வாங்கி வரவும்.

தேர்வுக் குழு அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிக்குள் ஒப்படைப்பு செய்யவும்.

**<u>காலியாகவுள்ள இடங்கள்:–</u>**

(சித்தா, ஆயுர்வேதா, யுனானி,, ஓமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவப் படிப்புகள்).

| | | | |
|---|---|---|---|
| **<u>அரசு கல்லூரி</u>** | – | சித்தா | 2 (ஆ.தி :1/ ஆ.தி.ப.கு: 1) |
| | | யுனானி | 7 |
| | | யோகா மற்றும் இயற்கை மருத்துவம் | 1 (மி.பி.வ : 1 ) |

**<u>சுயநிதிக் கல்லூரிகள்</u> –** சுயநிதிக் கல்லூரிகளில் மட்டும் ஏறத்தாழ 450 அரசு ஒதுக்கீட்டிற்கான காலியிடங்கள் உள்ளது.

**தேர்வுக் குழு தொலை பேசி எண் 044– 26190246**
**இணைய தளம் முகவரி** http/ www.tn.health.org

---

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.